III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE.

O.S.148/2016

Deposition of witness for the Plaintiff/PW1
solemnly by Tmt.K.Shanthi, Assistant,
in accordance with the provision of Act I for 1873 on 04-07-2026

| | | | |
|---|---|---|---|
| Name | : ரூப்ராஜ் | Village | : |
| Father's / Husband's Name | : எஸ்.பி.கோத்தாரி | Calling | : |
| Age | : | Taluk | : |

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

(சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.)

எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்ற வா.த.சா.ஆ.16 வங்கி கணக்கு விவரங்களை பார்க்கும்பொழுது நான் ஒரு பிசினஸ்மேனாக தெரிகின்றேன் என்றால் ஆமாம் நான் ஒரு பிசினஸ்மேன்தான். அதனால் எனது வங்கி கணக்கில் சரளமாக பண வரவு செலவு இருக்கும் என்றால் எனக்கு எனது பெயரில் சேமிப்பு கணக்கும் பிசினஸ் பெயரில் நடப்பு கணக்கும் தனித்தனியாக இருக்கின்றது. எனது பிசினஸ் வரவு செலவுகள் எல்லாம் நடப்பு கணக்கில் இருக்கும். என்னிடம் காட்டப்படுகின்ற எனது தரப்பில் குறியீடு செய்யப்பட்டிருக்கின்ற வா.த.சா.ஆ.16 வங்கி கணக்கு விவரத்தில் 03.03.2015 அன்று RTGS மூலமாக எனது வங்கி கணக்கிற்கு ரூ.15 லட்சம் வந்திருக்கின்றது என்றால் சரிதான். இந்த வங்கி கணக்கு விவரங்கள் படி 03.05.2013 அன்று ரூ.5 லட்சமும், 04.05.2013 அன்று ரூ.5 லட்சமும், 08.05.2013 அன்று ரூ.1 லட்சமும், 14.05.2013 அன்று ரூ.3,50,000/-மும் எனது வங்கி கணக்கில் இருந்து எடுக்கப்பட்டிருக்கின்றது என்று சொன்னால் சரிதான். வா.த.சா.ஆ.16 ஆவணம் வழக்கிற்காக பொய்யாக தாக்கல் செய்யப்பட்டிருக்கின்ற ஆவணம் என்றாலும் சரியல்ல. பிரதிவாதி எனக்கு ஒரு அறிவிப்பு கொடுத்து எனது வருமான வரி கணக்குகளை தாக்கல் செய்யும்படி கோரினார் என்றால் சரிதான். அவர் 2011 லிருந்து 2016 வரை நான் வருமானவரி

அலுவலகத்தில் தாக்கல் செய்திருக்கின்ற வருமான வரி விவரங்களை கேட்டார். நான் இதுவரை அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வருமானவரி கணக்குகளை தாக்கல் செய்யாமல் பொய்யான வங்கி கணக்கு விவரங்களை தாக்கல் செய்திருக்கின்றேன் என்றால் சரியல்ல. நான் அந்த வருமான வரி கணக்குகளை தாக்கல் செய்திருந்தால் யார் யாருக்கு எவ்வளவு பணம் கொடுத்தேன், யார் யாரிடமிருந்து எவ்வளவு பணம் வாங்கினேன் என்ற விவரம் தெரிந்துவிடும் என்பதால் அதனை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியும் அவரது மனைவி உஷாவும் என்னுடன் லேவாதேவி கணக்கு நீண்ட நாட்களாக வைத்திருந்தார்கள் என்றால் அவர்கள் எனது கூட்டுக்குடும்பத்தில் லேவாதேவி தொடர்பு வைத்திருந்தார். இந்த பரிவர்த்தனை எனக்கும் அவருக்குமான தனிப்பட்ட பரிவர்த்தனை. நான் எப்பொதெல்லாம் பிரதிவாதிக்கு பணம் கடனாக கொடுக்கின்றேனோ அப்பொதெல்லாம் அவரிடம் இருந்து பவர் ஆப் அட்டார்னி பத்திரம் எழுதி வாங்குவது வழக்கம் என்றால் சரியல்ல. வழக்கமாக நான் பிரதிவாதி என்னிடம் இருந்து வாங்கிய பணத்தை திருப்பி கொடுக்கும்பொழுது பவர் ஆப் அட்டார்னியை ரத்து செய்து கொடுப்பேன் என்றால் சரியல்ல. ஜெ.கே.என்று அழைக்கப்படுகின்ற ஜோசப் கமல்ராஜ் மற்றும் பரமசிவம் என்பவர்களை எனக்கு தெரியுமா என்றால் அவர்களை எனக்கு தெரியாது. எனக்கு இவர்களை நன்றாக தெரியும் என்றாலும், அவர்களுக்கும் நான் கடன் கொடுத்திருக்கின்றேன் என்றாலும், சரியல்ல. அவர்கள் நீதிமன்றத்திற்கு வந்து உண்மையை சொல்லிவிடுவார்கள் என்பதால் நான் அவர்களை தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி தாவா சொத்தை வாங்குவதற்காகத்தான் என்னிடம் பணம் கடனாக பெற்றார் என்றால் சரியல்ல, நான் தாவா சொத்தை பிரதிவாதியிடமிருந்து வாங்குவதற்காகத்தான் அவருக்கு பணம் கொடுத்தேன். பிரதிவாதி உண்மையிலேயே என்னிடம் சொத்தை விற்பதாக இருந்திருந்தால் அவர் சொத்தை விற்பனை பெற்ற தேதியன்றே அவர் விற்பனை பெற்ற குறைவான தொகைக்கு என்னிடம் கிரைய ஒப்பந்தம் செய்திருக்க மாட்டார் என்றால் சரியல்ல. பொதுவாக கிரைய ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்ட பிறகு பவர் ஆப் அட்டார்னி கொடுக்கமாட்டார்கள் என்றால் சரியல்ல. நான் தாக்கல்

செய்திருக்கின்ற வா.த.சா.ஆ.2, 3, 4 மற்றும் 16 ஆவணங்கள் செல்லத்தக்கவை அல்ல என்றால் சரியல்ல. நான் கூறியுள்ளபடி பரிகாரம் எனக்கு கிடைத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**